# ஹலால் குறித்த விழிப்புணர்வு இல்லை!

பொதுவாக முஸ்லிம்களில் பலர் வெளியூர்களுக்குச் சென்றால்... ஓட்டல்களில் சைவ உணவையே கேட்டு வாங்கி உண்பார்கள். அவர்கள் அசைவப் பிரியர்களாக இருந்தும் சைவ உணவை கேட்டு வாங்கி உண்பதற்குக் காரணம், ஓட்டல்களில் சமைக்கப்படும் அசைவ உணவுகள் குறிப்பாக இறைச்சி மற்றும் அது சார்ந்த உணவு வகைகள் இஸ்லாமிய முறைப்படி 'ஹலால்' (அனுமதிக்கப்பட்டது) செய்யப்பட்ட பிராணிகளின் இறைச்சிதானா என்ற சந்தேகம்தான்!

இதுபோன்ற சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் நடந்துகின்ற உணவகங்களில் பச்சை நிறத்தில் 'ஹலால்' என்று அச்சடிக்கப்பட்ட 'ஸ்டிக்கரை' ஒட்டி வைத்துள்ளனர். இந்த ஸ்டிக்கரைப் பார்த்து ஹலால் என்று நம்பி முஸ்லிம்களில் பலர் சாப்பிட்டுவிட்டுச் செல்கின்றனர்.

அண்மையில் நாம் சென்னையில் இருக்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு சென்றிருந்தோம். அங்கே ஒரு முஸ்லிம் குடும்பமும் சாப்பிட வந்திருந்தது. இஸ்லாம் கூறும் முறைப்படி பர்தா உடை அணிந்து பேணுதலுடன் காட்சியளித்தனர் அக்குடும்பத்தின் பெண்மணிகள். அவர்கள் 'மெனு' கார்ட்டில் உள்ள உணவு வகைகளை சுட்டிக்காட்டி 'ஆர்டர்' செய்வதில்தான் கவனம் செலுத்துகிறார்களே தவிர, இது 'ஹலாலா' என்று ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை. அந்த உணவகத்தில் ஹலால் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்ததை கவனித்து அதை நம்பி விட்டார்களா என்று தெரியவில்லை.

நாம் சர்வரை அழைத்து இங்கு தயாரிக்கப்படும் 'சிக்கன்' ஹலால் முறையில் அறுக்கப்பட்தா? என்று கேட்டபோது, அவர் ஒரு பிரபல 'சிக்கன்' கம்பெனியின் பெயரைச் சொல்லி அங்கே தான் வாங்குகிறோம் என்றார். அந்தக் கம்பெனி ஹலால் முறையில் அறுத்துத்தான் உங்களுக்கு சப்ளை செய்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? என நாம் கேட்க, 'அது தெரியாது சார்' என்றார் அந்த சர்வர்.

இந்த உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த ஓட்டல் மேனேஜர் ஹலால் ஸ்டிக்கரை சுட்டிக்காட்டி, 'இது ஹலால்தான் சார்' என்றார். நாம் தொடர்ந்து கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லத் திணறிய மானேஜர், வியாபாரத்தை நாம் கெடுக்கிறோம் என்ற வெறுப்போடு நம்மை முறைத்துப் பார்த்தார்.


ஜின்னா

இப்படித்தான் ஹலால் செய்யப்படாத உணவுகளை முஸ்லிம்களில் பலர் உண்டு வருகிறார்கள் அவர்களை அறியாமலேயே!

அண்மையில் இது குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றை சென்னையில் நடத்தியிருக்கிறது ஹலால் இந்தியா என்கிற நிறுவனம். இதில் இஸ்லாமிய பத்திரிகையாளர்களும், இஸ்லாமிய அமைப்புகளின் பிரநிதிகளும் உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது மக்கள் மத்தியில் அவசியமான விழிப்புணர்வு தான் என்பதை அறிந்து கொண்ட நாம் ஹலால் இந்தியா நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான முஹம்மது ஜின்னாவை தொடர்பு கொண்டு பேசினோம்.

“எத்தனையோ விஷயங்களில் முஸ்லிம் மக்கள் மார்க்க சட்டதிட்டங்களை பேணுதலோடு கடைபிடிக்கிறார்கள். ஆனால் நாம் அன்றாடம் உண்ணுகின்ற உணவு ஹலாலானதா? அல்லது ஹராமான (தடுக்கப்பட்ட) பொருட்கள் அதில் கலந்துள்ளனவா என்பதை கவனிப்பதில்லை. இந்த விஷயத்தில் அசட்டையாகவே இருக்கிறோம். காரணம் இது குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததே!

இதை கவனித்த நாம் ஹலால் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்கிற நிறுவனத்தை தொடங்கியிருக்கிறோம்.

ஹலால், ஹராம் என்பது நாம் உண்ணுகின்ற பொருட்களில் மட்டுமல்ல, பற்பசை, அலங்காரப் பொருட்கள் போன்றவற்றிலும் பிராணிகளிடமிருந்து எடுக்கப்படும் சில வகை அமிலங்கள் கலக்கப்படுகின்றன.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? சைவ உணவெல்லாம் ஹலால் ஆகிவிடாது. உதாரணமாக, பால் பொருட்கள், உணவு அலங்காரப் பொருட்கள், சாஸ் வகைகள், வெனிலா போன்ற உணவுக் கலவைகளில் போதைப் பொருட்கள், ஊன்பசை, நீர்மப் பொருளாக ஆக்குவதற்குத் தேவையான எமுல்சிஃபியர்ஸ் போன்ற அமிலங்கள் பிராணிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

இவை முறையாக அறுக்கப்படாத பிராணிகளிலிருந்து தயார் செய்யப்பட்டிருந்தால் இது ஹராம் ஆகும். ஏராளமான தாவர உணவுகளில் ஒயின் போன்ற மது கலக்கப்படுகின்றன. மது ஒரு துளியானாலும் ஹராம்தானே?” என்று சொல்லி நிறுத்தியவர், தொடர்ந்து சில வகை சாஃப்ட் டிரிங்களிலும் பன்றியின் கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட ரசாயனங்கள் கலக்கப்படுகின்றன.

இவற்றை எல்லாம் கண்டறிந்து ஹராம் கலக்கப்படாத தூய்மையான பொருட்களை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் ஹலால் இந்தியா 'ஹலால்' சான்றிதழ்களை வழங்கி வருகிறது.

**“சைவ உணவெல்லாம் ஹலால் ஆகிவிடாது. உதாரணமாக, பால் பொருட்கள், உணவு அலங்காரப் பொருட்கள், சாஸ் வகைகள், வெனிலா போன்ற உணவுக் கலவைகளில் போதைப் பொருட்கள், ஊன்பசை, நீர்மப் பொருளாக ஆக்குவதற்குத் தேவையான எமுல்சிஃபியர்ஸ் போன்ற அமிலங்கள் பிராணிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.”**

இந்திய அரசின் அங்கீகாரத்துடன் சர்வதேச நாடுகளில் இதனை செயல்படுத்தி வருகிறோம்.

நுகர் பொருட்கள் – உணவு வகைகளை தயாரிக்கும் நிறுவனங்கள் எங்களிடம் 'ஹலால்' சான்றிதழுக்கு விண்ணப்பித்தால் எங்கள் ஆய்வாளர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு நேரில் அந்நிறுவனத்தின் பொருளை சோதனைக்கு உட்படுத்தி அதில் கலக்கப்பட்டுள்ள பொருட்களை ஆய்வு செய்து (ஹராமான கலவைகள் இல்லை என்பதை தெரிந்து கொண்டபின்) 'ஹலால்' சான்றிதழ் வழங்குகிறோம். இந்த சோதனையின் போது உணவுக் கலவை பொருட்களை கவனமாக ஆய்வு செய்கிறோம். சென்னையில் பல நிறுவனங்களுக்கு 'ஹலால்' சான்றிதழை வழங்கியிருக்கிறோம்.

நீங்கள் சந்தேகப்படும் ஒரு பொருளில் ஹராமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும், ஹலால் இ–கோட் உள்ள உணவுக் கலவைப் பொருட்கள் எது என்பதையும் தெரிந்து கொள்ள **www.halalindia.co.in** என்ற இணைய தளத்தில் சென்று பார்த்துக் கொள்ளலாம்” என்று விளக்கமாகச் சொல்லி முடித்தார் ஜின்னா.

– ஃபைஸ்

அல்லாஹ்வின் திருப்பெயரால்......
XCell Digitronix
innovation begins here...
MOBILE PHONES | MEMORY CARDS | BLUETOOTH | PENDRIVE
DIGITAL CAMERAS | i PODS and more........
எக்ஸ்செல் டிஜிட்டிரானிக்ஸ்
மொபைல் போன்ஸ், மேமோரி கார்டுஸ், புளூடூத்ஸ், பெண்டிரைவ்ஸ், டிஜிட்டல் கேமராஸ், ஐ போட்ஸ் மற்றும் பல......
Shop #1D,
Nawab Habibullah Electronic Market,
#24/32 Wallers Road, Mount Road,
Chennai - 600 002. India.
Ph : +91- 44 - 4322 7713
Fax : +91- 44 - 2858 7713
Mob : +91- 98408 97206
+91- 96771 03519
email : xcelldigitronix@gmail.com
www.imageindia.biz